| මගේ අංකය / எனது இல / My No | DSD/HO/07/SD/03/HOU.2025 | ඔබේ අංකය / உமது இல / Your No | | දිනය / திகதி / Date | 2025.08.12 |
|---|---|---|---|---|---|

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம்: 2025/06**

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள்,
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல மாவட்ட சமுர்த்தி பிரதி/உதவிப் பணிப்பாளர்கள்,
சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு

## "ஆரோக்கிய வசதியுடனான ஒரு வீடு - வலுவான ஒரு குடும்பம்"

## சமுர்த்தி வீடமைப்பு வேலைத்திட்டம் 2025

### 01. அறிமுகம்

வீடமைப்பு வேலைத் திட்டத்திற்காக நிரந்தரமான வேலைத் திட்டமொன்றினை செயல்படுத்துவதற்கு ஆரம்பிக்கின்ற இந்த வேலைத்திட்டத்தில் 20 இலட்சம் குடும்பங்களை 05 ஆண்டுகளில் வலுவூட்டும் வேலைத் திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிரந்தரமான வீடு ஒன்றினை வழங்கும் நோக்கத்துடன் இந்த வேலைத் திட்டம் துரிதமாக நடாத்தப்படவுள்ளது.இதன் கீழ் நிரந்தரமான வீடில்லாத வலுவூட்டப்பட உள்ள மக்களுக்கு நிரந்தர வீடொன்றினை நிர்மாணித்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

ஆகையினால் வாழ்வதற்கு வீடில்லாது மற்றும் பொருளாதார வறுமை நிலையினால் வாடும் வலுவூட்டப்படவுள்ள குடும்பங்களின் வீட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வினை வழங்கும் பொருட்டு அக்குடும்பங்கள் தொடர்பில் விசேட கவனத்தினைச் செலுத்தி நிவாரணங்களை வழங்குவதற்கு **விசேட வீடமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் "ஆரோக்கிய வசதியுடனான ஒரு வீடு - வலுவான ஒரு குடும்பம்"** என்ற தலைப்பின் ஊடாக 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. இந்த வேலைத் திட்டமானது பல கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

**ரன் விமன வீடமைப்பு வேலைத் திட்டம் (ரூ1,000,000/= வீதம் வழங்குதல்)**

பிரதேச செயலகப் பிரிவு ஒன்றிற்கு மூன்று பயனாளிகள் வீதம் தெரிவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன் திருத்தங்களை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். பிரதேச செயலக பிரிவிற்குள் உள்ள மிக வறிய வலுவூட்டப்பட உள்ள பட்டியலில் கட்டாயம் இருக்க வேண்டிய குடும்பம் ஒன்றின் பொருட்டு ரூ.1,000,000/= வீதம் வழங்கப்படுகின்றது. இங்கு கட்டாயமாக



| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்) / Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director (Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

எமது அளவுகோல்களை பின்பற்றி வலுவூட்டப்பட உள்ள குடும்பங்களிலிருந்து முன்னுரிமை கிடைக்க வேண்டிய குடும்பங்களை இங்கு தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். அதேபோன்று தகுதியைப் பெறாத குடும்பங்களின் பொருட்டு வீடுகளை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட மாட்டாது. இக் குடும்பங்களை தெரிவு செய்யும்போது கட்டாயமாக வீடுகளில் பொருளாதார நடவடிக்கையொன்றினை மேற்கொண்டு வலுவூட்டி குடும்பங்களை முன்னேற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். பொருளாதார ரீதியான நடவடிக்கையினை செயற்படுத்த முடியாத குடும்பங்களை தெரிவு செய்வதனை தவிர்த்தல் வேண்டும்.அதன் பிரகாரம் பிரதேச செயலகப் பிரிவொன்றுக்கு 03 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 3,000,000 வழங்கப்படவுள்ளது.

**02 வேலைத் திட்டத்தினை செயற்படுத்துதல்.**

**I. உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய அளவுகோல்கள்.**

வீட்டினை நிர்மாணிக்கும் பொருட்டு தனக்கு சொந்தமான காணி ஒன்று இருத்தல் வேண்டும். காணியின் சிக்கல் அற்ற நிலை தொடர்பில், பின்னர் பிரச்சினைகள் உருவானால் அந்த முன்மொழிவினை நிராகரித்து நிதியை தலைமை அலுவலகத்திற்கு பெற்றுக் கொள்வதுடன் எக்காரணத்தின் அடிப்படையிலும் திருத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. 2025 ஆம் ஆண்டில் வலுவூட்டப்படவுள்ள குடும்பம் ஒன்றாக இருக்க வேண்டியதுடன் வருமானமீட்டல் கருத்திட்டம் ஒன்றினை மேற்கொள்கின்ற குடும்பம் ஒன்றாக இருப்பது கட்டாயமானதாகும். உதாரணமாக தையல் கைத்தொழில், சில்லறைக் கடை, சிறிய வகை உணவுகளை தயாரித்தல் (இடியப்பம், பிட்டு, அப்பம் போன்றவை), துவிச் சக்கர வண்டி திருத்துமிடம், சிகை அலங்காரம், சுற்றுலாத்துறைக்கான தங்குமிட வசதிகளை வழங்குதல் போன்ற கைத்தொழில் ஒன்றை மேற்கொள்ளல் வேண்டும். குடும்பத்தில் நான்கு அங்கத்தவர்களாவது(தாய், தந்தை, இரு பிள்ளைகள், பெண் பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் தொடர்பில் கூடிய கவனம்) இருப்பது கட்டாயமானதாகும் என்பதுடன் விதவைக் குடும்பம் ஒன்றாக இருப்பது அல்லது மாற்றுத் திறனாளி ஒருவர் குடும்பத்தில் உள்ளமை (விசேடமாக வீட்டின் பிரதான குடியிருப்பாளர் தொடர்பில் கவனத்தில் கொள்ளவும்) அல்லது பொருளாதார நிலையினை கவனத்தில் கொள்ளும் போது அதிக வறுமையால் வாடும் குடும்பங்களை தெரிவு செய்வது மிக பொருத்தமானதாகும். தகுதிகளை பூர்த்தி செய்ய முடியாத வீடமைப்பு முன்மொழிவுகள் நிராகரிக்கப்படலாம் என்பதனால் அளவுகோல்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது கட்டாயமானதாகும். இதற்குரிய வீட்டின் திட்டப்படமானது இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் காணியின் அமைப்பிற்கு ஏற்ப அந்த வீடுகளின் படிவத்திற்கு பொருத்தமான பிரகாரம் வீட்டின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

இதன் பொருட்டு 05 கட்டங்களின் கீழ் மாவட்ட செயலகத்தின் மூலம் சமுதாய அடிப்படை வங்கிக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதுடன் வீடொன்றின் பொருட்டு வழங்கப்படும் தொகையானது ரூபா 1,000,000/=ஆகும். ஒரு தடவையில் நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதனை குறிப்பிட்டுள்ள பந்திக்கு அமைய 05 தடவைகளின் கீழ் பயனாளிகளுக்கு நிதியை விடுவித்தல் வேண்டும்.

**II. தெரிவு செய்யும் நடவடிக்கைகள்**

மேலுள்ள விடயத்தின் பொருட்டு தலைமைத்துவத்தினை வழங்கி வீடு இல்லாத, வீடொன்றினை நிர்மாணித்துக்கொள்ள ஆற்றல்கள் இல்லாத, இருப்பினும் வீடொன்றினை நிர்மாணித்துக் கொள்வதற்கு தன்னகத்தே காணியை கொண்டுள்ள வலுவூட்டப்பட உள்ள குடும்பம் ஒன்றாக இருத்தல் வேண்டும். தெரிவு செய்வதில் 01ஆம் இலக்க அளவுகோலின் கீழ் பிரதேச செயலக பிரிவொன்றிற்கு 03 வீதம் என்ற வகையில் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

**விசேடமாக இந்த வேலைத் திட்டத்திற்காக வழங்கப்படுகின்ற படிவங்கள் மூலம் மாத்திரம் தகவல்களை வழங்க வேண்டியதுடன் இதன் பொருட்டு பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வீட்டை நிர்மாணித்து முடியும் வரை பொறுப்பு வகித்தல் வேண்டும்.**

வீடமைப்புத் திட்டத்தின் பொருட்டு தெரிவு செய்யப்படும் குடும்ப அலகுகள் தொடர்பில் பூர்த்தி செய்யும் தகவல்கள் படிவத்திற்குறிய தகவல்களை பிழைகளின்றி பூர்த்தி செய்து பெற்றுக் கொள்வது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் பொறுப்பாகும். குறித்த படிவங்கள் இன்றி அனுப்பப்படுகின்ற திட்டங்கள் நிராகரிக்கப்படும். மேலும் பல்வேறு படிவங்கள் அத்துடன் பல்வேறு பெயர்களில் அனுப்பப்படுகின்ற முன்மொழிவுகளும் நிராகரிக்கப்படும்.

**III. நிதி ஒதுக்கீட்டினை வழங்குவதும் தவணைப் பணத்தினை விடுவிக்கும் முறையும்.**

இங்கு மாவட்ட அலுவலகங்கள் மூலம் சமுதாய அடிப்படை வங்கிக்கு ஒரு வீட்டிற்கு ரூபா 1,000,000/-வீதம் 05 கட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவதுடன் 2025 செப்டம்பர் மாதத்தில் இருந்து நிதி வழங்கப்படும். பயனாளிகளுக்கு நிதியை விடுவிக்கும்போது 05 கட்டங்களின் கீழ், கீழே குறிப்பிடப்படும் பிரகாரம் நிதியை வழங்குதல் வேண்டும். இங்கு மாவட்ட செயலகத்திலிருந்து முன்மொழிவுகள் கிடைக்கின்ற தொடர் முறைக்கு ஏற்ப நிதி வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

| கட்டம் | வழங்கப்படும் தொகை | முடிக்கப்படவேண்டிய பணி வறையறைகள் |
|---|---|---|
| கட்டம் 01 | ரூ. 150,000.00 | அச்சிப்பிரதியினை பூர்த்தி செய்யும் பொருட்டு |
| கட்டம் 02 | ரூ 250,000.00 | லின்டன் மட்டம் வரை பூர்த்தி செயவதற்கு |
| கட்டம் 03 | ரூ 200,000.00 | கூறை மட்டம் வரை அவர்களை முடிப்பதும் கதவு ஜன்னல் பொருத்துவதும் |
| கட்டம் 04 | ரூ 250,000.00 | கூறையினை பூர்த்தி செய்தல் |
| கட்டம் 05 | ரூ. 150,000.00 | கூறை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் சீமெந்து பூச்சு மற்றும் சகல பணிகளையும் பூர்த்தி செய்தல் |

இவ்வாறு நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளின் பொருட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபாரிசினை இரு தடவைகளில் பெற்றுக்கொள்ள வேண்டியவதுடன் அது நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கின்ற சந்தர்ப்பத்திலும் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்கின்ற சந்தர்ப்பத்தில். நிர்மாண நடவடிக்கைகளின் ஆரம்பத்தில் பரீட்சித்து பார்த்து உரிய தரங்களுக்கு ஏற்ப செயல்படுத்துவதற்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கவேண்டியதுடன் ஆரம்பக் கொடுப்பனவுகளின் பொருட்டு சிபாரிசினையும் வழங்குதல் வேண்டும்.

அதன்பின்னர், இரண்டாவது மூன்றாவது மற்றும் நான்காவது கட்டங்களின் பொருட்டு இதற்கு முன்னர் வீடமைப்பு வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரகாரம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களூடாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய அந்தந்த கட்டங்களில் எதிர்பார்த்த அளவுக்கு வீடமைப்பு நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என தலைமையக முகாமையாளர்கள் மற்றும் வங்கிச் சங்க முகாமையாளர்களின் சிபாரிசுகளை வழங்குதல் வேண்டும்.

இறுதியாக குறிப்பிட்ட ஆலோசனைகளின் பிரகாரம் வீடமைப்பு வேலை திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதனை ஆக்கப்பட்டுள்ளது தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஊடாக எழுத்து மூல சிபாரிசு பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் இறுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம். இதனை சகல சந்தர்ப்பங்களிலும் காலம் தொடர்பில் கவனத்திற்கு கொண்டு துரிதமாக நடவடிக்கையில் பூர்த்தி செய்வதற்கு உத்தியோகத்தர்களால் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

தேசிய வேலை திட்டம் ஒன்றாக மிக முன்னுரிமையினை இதை வழங்கி இந்த வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டியதுடன் சகல உத்தியோகத்தர்களினதும் அர்பணிப்பு மற்றும் நெறிப்படுத்தலின் பிரகாரம் சமூகத்திற்கு தேவையான முக்கியமான தேவைப்பாடு ஒன்றான வாழ்வதற்கான புகலிடம் ஒன்றினை வழங்கும் பொருட்டு தாங்கள் மேற்கொள்கின்ற முயற்சிக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற தொகையிலிருந்து 1%த்திகான நிர்வாக செலவு தங்களது வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் மாவட்ட அலுவலகங்களுக்கு 0.25%த்தினையும் பிரதேச செயலகங்களுக்கு 0.75% த்தினையும் பயன்படுத்திக் கொள்ள முடியும். நிர்வாகச் செலவினை செலவு செய்யும் போது மாவட்டத்திற்கு கிடைக்கின்ற தொகை தொடர்பில் கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டும். (பின்னர் ஏதேனும் ஒரு காரணத்தின் அடிப்படையில் செய்யப்படாத வீடொன்றாக அது இருந்தால் அதற்கான நிர்வாக செலவை பெற்றுக் கொள்ள முடியாது.) இந்த அங்கீகரித்த நிர்வாக செலவின் ஊடாக எழுது கருவிகள் எரிபொருள் மற்றும் விசேட பிரயாண படிகள் ஏற்பட்டால் அதனையும் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு ஏதேனும் ஒரு கொடுப்பனவிற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டால் ஆகக் கூடியது இரண்டு நாட்களுக்கான இணைக்கொடுப்பனவு ஒன்றினையும் செலுத்த வாய்ப்பு உள்ளது. தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கான கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது அவ உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற கோரிக்கை கடிதத்தினை பிரதேச செயலாளரின் அங்கீகாரத்துடன் செலுத்த முடியும்.

வீட்டினை நிர்மாணிக்கும் பொருட்டு வலுவூட்டுதலுக்குரிய கட்டாயமான பொருளாதார நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்கின்ற குடும்பம் ஒன்றினை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். இங்கு ஆகக் குறைந்தது 600 -750 இற்குமிடைப்பட்ட சதுர அடியை கொண்ட வீடொன்றை நிர்மாணித்தல் வேண்டும். எங்களால் அறிவிக்கப்பட்டுள்ள வீட்டின் மாதிரிக்கு அமைய பயனாளியின் காணிப் பரப்பு தொடர்பில் கவனத்தினை செலுத்தி வீட்டினை நிர்மாணிப்பது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

2025 டிசம்பர் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் வீடமைப்பு நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்து சகல கொடுப்பனவு நடவடிக்கைகளையும் முடித்தல் வேண்டும். இருப்பினும் நிதி ஒதுக்கீட்டினை வழங்குதல் மற்றும் இந்த வேலை திட்டத்தினை செயல்படுத்தும் போது உருவாகும் சிக்கல்களை கவனத்தில் கொண்டு நாட்களை நீடிப்பதற்கு தேவையேற்பட்டால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனையும் மேலும் அறியத் தருகின்றேன்.

இந்த வீடுகளை நிர்மாணிக்கும் போது பயனாளிக்கு சொந்தமான காணியின் அமைவிடத்திற்கு ஏற்ப தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டிற்கான வரைபட திட்டத்தின் பிரகாரம் அமைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். மேலும் பெரிய அளவில் அத்திவாரங்களை இட்டுக் கொள்வதனை தவிர்க்கவும். ஒரு சில மாவட்டங்களில் முன்னைய அனுபவங்களின் பிரகாரம் மண்சரிவுக்குறிய பிரதேசங்கள் தொடர்பான கவனத்தினை குறிப்பிட்டு காணிகளை தெரிவு செய்தல் வேண்டும் என்பதுடன் A தரத்தில்/அதே தரத்தில் மண் நிரப்பப்பட்ட வயல் காணிகளை தெரிவு செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளல் வேண்டும். 2025 ஆம் ஆண்டிற்குள் உள்ள நிதி ஒதுக்கீடு வறையறைகள் மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பதனால் மாவட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கையும் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. அதன் காரணமாக தெரிவு செய்யும்போது விசேட கவனத்தினை செலுத்தி வீடுகளை தெரிவு செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

அதன் பிரகாரம் இவ்வாண்டில் தனது மாவட்டத்திற்குரிய வீடமைப்பு திட்டங்களை 2025 ஆகஸ்ட் 30-ம் திகதிக்கு முன்னர் ஒரே தடவையில் வழங்குதல் வேண்டும். அடிக்கடி முன் வைக்கின்ற வீடமைப்பு முன்மொழிவுகளுக்கு மாவட்டங்களுக்கு நிதி வழங்கப்பட மாட்டாது என்பதனை சுட்டிக்காட்டுகின்றேன்.

தெரிவு செய்யப்பட்ட வீடுகளின், வீட்டினை நிர்மாணிப்பதற்கு முன்னரான புகைப்படம் மற்றும் பெயர் பட்டியலை கீழுள்ள படிவத்தின் பிரகாரம் பூர்த்தி செய்து 2025.08.30ஆம் திகதிக்கு முன்னர்

சமூக அபிவிருத்தி பிரிவின் மின்னஞ்சல் முகவரியான socialdev@samurdhi.gov.lk இற்கு முன் வைக்கவும்.

| தொடர் இலக்கம் | பி.செ.பிரிவு | சமுதாய அடிப்படை வங்கி | கி.உத்தி பிரிவு | பெயர் | முகவரி | தெரிவு செய்வதற்கான காரணமும் குறிப்பிட்ட கருதிட்டமும் | பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தர்களின் பெயர் | தொலைபேசி இலக்கம் | சமூக அபிவிருத்தி உதவியாளர் | தொலை பேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

- வீட்டினை தெரிவு செய்யும்போது இக் குடும்பத்தினரால் புதிய வீட்டில் செயற்படுத்தவுள்ள கருத்திட்டத்தினை கட்டாயமாக குறிப்பிடவும்.
- பிரதேச செயலகப் பிரிவிற்கு கிடைக்கின்ற வீடுகளுக்கான கோரிக்கைளை குழு ஒன்றின் மூலம் நேரடி கலந்துரையாடலுக்கு உட்படுத்தியதன் பின்னர் தெரிவு செய்து கொள்வது மிக பொருத்தமான முறையொன்றாகும்.
- அவ்வாறு தெரிவு செய்து கொண்ட திட்டங்களை பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் ஊடாக சமர்ப்பித்து குழுவின் சிபாரிசினை பெற்றுக்கொள்ள வேண்டும்.
- விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும் போது வெளிப்பாட்டு தன்மையுடன் புள்ளிகளை வழங்கும் பொதுவான முறை ஒன்றினை பயன்படுத்திக் கொள்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பதுடன் பயனாளிகளின தகவல்கள் உண்மையானது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மேலும் இவ்வாறு தெரிவு செய்து கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு வீட்டினதும் முன்னைய மற்றும் பின்னைய நிலையினை குறித்துக் காட்டும் புகைப்படம் ஒன்றினை தங்களது பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டியதுடன் வீட்டினை திறந்து வைக்கின்ற சந்தர்ப்பத்தில் அந்த அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். விண்ணப்ப படிவத்துடன் அந்த நபரின் கோரிக்கைக் கடிதம் மற்றும் வீட்டின் முன்னைய நிலையின் புகைப்படம் ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

இச்சகல வீடுகளினதும் முன்னேற்றத்தினை ஒவ்வொரு மாதமும் வீடமைப்பு லொத்தர் நம்பிக்கை பொறுப்பு சபைக்கு முன்வைக்க வேண்டியுள்ளதனால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களுக்கு அமைய ஒவ்வொரு மாதமும் 05ஆம் திகதிக்கு முன்னர் சமூக அபிவிருத்திப் பிரிவிற்கு மின்னஞ்சல் மூலமாக வழங்குதல் வேண்டும் என சுட்டிக் காட்டுகின்றேன். இங்கு ரூ.1,000,000/-வீடுகளின் பொருட்டான முன்னேற்றத்தினை மாதிரிப் படிவத்திற்கு அமைய குறிப்பிட்ட தினத்தில் அறிக்கையிடல் வேண்டும்.

**உரிய அறிக்கைகளை பிழைகள் இன்றி சமர்ப்பிக்காத மாவட்டங்கள் மற்றும் வலய சமுதாய அடிப்படை வங்கிகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்காமலிருப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு கட்டத்தினதும் இறுதியில் செலவாகிய தொகை தொடர்பில் அறிக்கையொன்றினை வழங்கி செயல்படுத்திய வீடுகளுக்கு மாத்திரம் அடுத்த கட்டத்திற்கு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் நிதிக் கோரிக்கைகளை கோருதல் வேண்டும்.** வீடுகளை நிர்மாணிக்கும் போது இக்குடும்ப அலகுகள் தொடர்பில் சமூக அபிவிருத்தி உதவியாளரின் பிரத்தியேகமான கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் வாழ்வாதார மற்றும் வங்கிப் பிரிவினை தொடர்பு படுத்திக் கொண்டு இக்குடும்பத்தின் வாழ்க்கை முறையினை பலப்படுத்திக் கொள்வதற்கு தேவையான வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி இக் குடும்பத்தை வலுவூட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

வேண்டும். 2025 ஆம் ஆண்டில் எமது திணைக்களத்தின் முக்கிய இலக்கானது குடும்பங்களை வலுவூட்டும் வேலைத் திட்டமாகும். அக்குடும்பங்களின் சமூக ரீதியான தேவைப்பாடாக இருப்பது வீடொன்றினை நிர்மாணிப்பதற்கு வசதிகளை வழங்குவதாகும். அவ்வாறு வீடொன்றினை நிர்மாணிப்பது அக்குடும்பம் ஊக்குவிக்கப்படுகின்றது. அந்த இலக்குகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

சமுர்த்தி வீடமைப்பு வேலைத் திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு குறித்த உத்தியோகத்தர்களை நெறிப்படுத்துவது தொடர்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் இதனை முக்கியமான பணி ஒன்றாகக் கருதி தங்களது செயற்பாடுள்ள பங்களிப்பினை வழங்குமாறு வினயமுடன் அறியத் தருகின்றேன்.



சீ.டீ.களுஆரச்சி
பணிப்பாளர் தலைமை அதிபதி.

பிரதிகள்

01. செயலாளர், கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - அ.கொ.பொருட்டு
02. பிரதம கணக்காளர் சமுர்த்தி.அ.திணைக்களம் - அ.கொ.பொருட்டு
03. பிரதான உள்ளக கணக்காய்வாளர் - அ.கொ.பொருட்டு
04. பணிப்பாளர் (குறு நிதி) - அ.கொ.பொருட்டு
05. பணிப்பாளர் (வாழ்வாதாரம்) - அ.கொ.பொருட்டு
06. பணிப்பாளர் (சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி) - அ.கொ.பொருட்டு
07. பணிப்பாளர் (சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் விளையாட்டு) - அ.கொ.பொருட்டு
08. பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) - அ.கொ.பொருட்டு
09. பணிப்பாளர் (திட்டமிடல்) - அ.கொ.பொருட்டு
10. பணிப்பாளர் (முன்னேற்றம்) - அ.கொ.பொருட்டு

TRANSLATED BY – M.M.M. JAWHAR (Translator)

**சமுர்த்தி விசேட வீடமைப்பு வேலைத்திட்டம் - 2025**
**தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் படிவம் (ரூ. 1,000,000/- வீடுகள்)**

01. வீடு தொடர்பான அடிப்படை தகவல்கள்

1. பிரதான குடியிருப்பாளரின் பெயர் : ........................................................................................
2. முகவரி : ........................................................................................................................
3. மாவட்டம் : ......................................................................................................................
4. பிரதேச செயலகப் பிரிவு : ....................................................................................
5. கிராம உத்தியோகத்தர் பிரிவு : .............................................................................
6. சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் பெயர் : ...............................................................
7. தேசிய அடையாள அட்டை இலக்கம்: .......................................................................
8. குறித்த பயனாளியை வலுவூட்டுவதற்கு தெரிவு செய்துள்ள பிரிவு.................................
   8.1 வங்கிச் சங்கத்தின் பெயர். ......................
   8.2 இந்த வீட்டில் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார செற்பாடுகளின் தன்மை.......
9. குடும்பம. தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

| தொடர் இலக்கம் | முழுப் பெயர் | பிரதான குடியிருப்பாளருடனான உறவு முறை | பால் நிலை / ஆண் / பெண் | வயது | திருமணமானவர் / திருமணமாகாதவர் | கல்வித் தரம் | தொழில் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

10. குடும்ப அங்கத்தவர்களின் தகவல்கள்

10.1 வாழ்க்கைத்துணை

1. உயிரோடு உள்ளார் ☐
2. மரணித்துள்ளார் ☐
3. மாற்றுத் திறனாளி ☐
4. செயற்படாதவர் ☐
5. விவாகரத்தானவர் ☐
6. ஏனையவை ☐

10.2 பாடசாலை செல்ல வேண்டியிருந்தும் பாடசாலை செல்லாத பிள்ளைகள் உள்ளனரா? ஆம் ☐ இல்லை ☐

10.3 குடும்ப அங்கத்தவர் ஒருவர் நாட்பட்ட நோயால் அவதிப்படுபவரா? ஆம் ☐ இல்லை ☐

10.4 குடும்பத்திற்குள் மாற்றுத்திறனாளிகள் உள்ளனரா? ஆம் ☐ இல்லை ☐

10.5 குடும்பத்தில் யாராவது போதைப்பொருள் / புகைத்தல் பாவிப்பவரா? ஆம் ☐ இல்லை ☐

11. பிற தகவல்கள்

11.1 பிற பொதுமக்கள் உதவிப் பணம் கிடைக்கப் பெறுவதாயின் அது எந்த வகையான உதவி மற்றும் அதன் பெறுமதி ரூபா..............................................

11.2 வீட்டினை நிர்மாணிக்கும் பொருட்டு திணைக்கள அன்பளிப்புக்களுக்கு மேலதிகமாக பிற நிதி வசதிகளை பெற்றுக் கொள்ளும் கூறுகள் ..............................................................................................................................

02. காணி தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

2.1 வசிக்கும் காணியின் ஆரம்ப உரித்து

1. அறுதி ☐ 2.சட்டவிரோதமானது ☐ 3. ஏனையவை ☐

2.2 அளவு – ஏக்கர் ...................... பேர்ச்சஸ் .......................

03. வீட்டின் தன்மை

3.1 நிரந்தரமானது ☐ பாதியளவு பூர்த்தி செய்தது ☐ தற்காலிகமானது ☐

3.2 வீட்டிற்கான மின்சாரம் உண்டு ☐ இல்லை ☐

3.3 கழிப்பறை வசதிகள் உண்டு ☐ இல்லை ☐
குழிக் கழிப்பறை ☐ நீர் வசதியுடனானது ☐

மேற்படி விண்ணப்பதாரியால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகின்றோம். அத்துடன் இப்பயனாளி அரசாங்கத்தின் அல்லது பிற எந்த ஒரு நிறுவனத்திலிருந்தும் உதவித் தொகையினைப் பெறவில்லை எனவும் உறுதிப்படுத்துவதுடன் அவருக்கு வீடொன்றினை நிர்மாணிக்க / பாவனையிலுள்ள வீட்டினை புதுப்பிக்க வேண்டியுள்ளதாகவும் சிபாரிசு செய்கின்றோம்.

1. பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
பெயர் :...............................................
கையொப்பம் :.....................................
திகதி :............................................

சமூக அபிவிருத்தி உதவியாளர்
பெயர் :...............................................
கையொப்பம் :.........................................
திகதி :............................................

2. சமுர்த்தி வலய முகாமையாளர்
பெயர் :....................................................................................................................
கையொப்பம் :...........................................................................................................
திகதி :...................................................................................................................

3. சங்க முகாமையாளர் அல்லது தலைமைப்பீட முகாமையாளர்
பெயர் :....................................................................................................................
கையொப்பம் :...........................................................................................................
திகதி :...................................................................................................................

அங்கீகரிக்கின்றேன்.

4. பிரதேச செயலாளர்
கையொப்பம் :.......................................
திகதி :............................................

5. மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்
பெயர் :...............................................
கையொப்பம் :.....................................
திகதி :............................................